**DEPOSITION OF WITNESS.**
**(Chapter XXIII, Cr.P.C)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, BODINAYAKANUR.**

**DVC.No.14/2019**

**Deposition of DW–1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. பாலாஜி | **Age** | : | 37/2026 |
| **Father's Name** | : | திரு. நாச்சியப்பன் | **Religion** | : | இந்து |
| **Village** | : | சின்னாளப்பட்டி | **Calling** | : | மென் பொறியாளர் |
| **Taluk** | : | ஆத்தூர்,<br>திண்டுக்கல் | **Caste** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **01/08/2026.**

புகார்தாரர் ஆஜர். 1, 4 எதிர்மனுதாரர்கள் ஆஜர். இருதரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்.

**எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

15) இந்த வழக்கில் இரண்டு, மூன்று, ஐந்து, ஆறு எதிர்மனுதாரர்கள் ஒருதலைபட்சமாக்கப்பட்டுவிட்டார்கள் என்றால் சரிதான். ஒன்று முதல் ஆறு எதிர்மனுதாரர்கள் ஆகிய நாங்கள் அனைவரும் கூட்டுக் குடும்பமாக ஒரே வீட்டில்தான் இருக்கிறோம் என்றால் சரிதான். கடந்த 7.2.2025 ஆம் தேதி தேனி மாவட்ட குடும்ப நல நீதிமன்றத்தில் மனுதாரர் தாக்கல் செய்திருந்த ஜீவனாம்ச வழக்கில் மாதம் 45 ஆயிரம் கொடுக்க வேண்டும் என உத்தரவிடப்பட்டு இருந்தது என்றால் சரிதான். அந்த உத்தரவிற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துள்ளோம். அந்த உத்தரவில் பாதிப்பணம் உடனடியாக கட்டுவதாக இருந்தால் அதில் Stay வழங்குவதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். Mediation ஐந்து முறை சென்று உள்ளோம்.

16) இன்றைய தேதி வரை அந்த ஜீவனாம்ச உத்தரவின்படி நான் 36 லட்சம் மனுதாரருக்கு கொடுக்க வேண்டியுள்ளது என்றால் சரிதான். அதில் 18,60,000/–

பணம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். பாக்கி 17,40,000/– ரூபாய் கொடுக்க வேண்டியுள்ளது என்றால் சரிதான். மதுரை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அந்த மனு தற்போது முடியவில்லை நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். எனக்கும் மனுதாரருக்கும் ஒரு பெண் குழந்தை உள்ளது என்றால் சரிதான்.

17) அந்த குழந்தையை தற்போதுவரை நான் பார்க்கவில்லை என்றும் அந்த குழந்தைக்கான எந்த பராமரிப்பும் செய்யவில்லை என்று சொன்னால் அவர்கள் என்னை பார்க்க விடவில்லை. நான் தாக்கல் செய்த எதிர் உரையிலும் நான் சொல்லியுள்ள நிறுவன வாக்குமூலத்திலும் இந்த விபரங்களை சொல்லவில்லை என்றால் குழந்தை பிறந்த அன்றே என்னை குழந்தையை பார்க்கவிடாமல் பிரச்சனை செய்தார்கள். தற்போதுவரை அந்த குழந்தை எங்கு படிக்கிறது என்ன படிக்கிறது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல போடியில் உள்ள லிட்டில் பிளவர் ஸ்கூலில் படித்து வருகிறார்.

18) நான் சொல்வதுபோல் குழந்தை போடியில் உள்ள பள்ளியில் படிக்கவில்லை என்றும் அது மதுரை வேலம்மாள் பள்ளியில் படித்து வருகிறது என்றும் எனக்கு எந்தவித அக்கறையும் இல்லை என்பதால்தான் குழந்தை எங்கு படிக்கிறார் என்ற விபரம் கூட எனக்கு தெரியவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் அமெரிக்காவில் 6.12.2023 முதல் 6.12.2025 வரை அமெரிக்காவில் பணி செய்தேன். நான் சென்னை விப்ரோ டெக்னாலஜி என்ற நிறுவனத்தில் வேலை பார்த்து அந்த நிறுவனத்தின் பணிக்காகத்தான் அமெரிக்கா சென்றேன் என்றால் சரிதான்.

19) எனது மனைவியை நான் சேர்ந்து வாழ வர சொன்னேன் என சொல்வது வழக்கிற்காக சொல்லும் பொய் என்றால் சரியல்ல. நான் தேனி மாவட்ட குடும்பநல நீதிமன்றத்தில் விவாகரத்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால்

சரிதான் அந்த வழக்கின் எண் HMOP No.117/2019 ஆகும். எனது மனைவி தாக்கல் செய்த HMOP No. 552/2022 கடந்த 25.8.2022 ஆம் தேதி என்னுடன் சேர்ந்து வாழ வேண்டும் எனச் சொல்லி மனு தாக்கல் செய்து அதில் உத்தரவானது என்றால் சரிதான் அது ஒருதலைபட்ச உத்தரவு.

20) நான் தொடர்ந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு அதனை மீண்டும் எடுத்து நடத்துவதற்காக மனு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். உண்மையில் எனக்கு சேர்ந்து வாழ வேண்டும் என்ற எண்ணம் கிடையாது என்றும் அவ்வாறு இருந்திருந்தால் மேற்படி உத்தரவுப்படி நான் நடந்து இருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவில் கண்ட சங்கதிகளை நான் ஒப்புக்கொண்டுள்ளேன் என்றால் சரியல்ல. அவ்வாறு ஒப்புக்கொண்டதால்தான் எனது குடும்ப உறுப்பினர்கள் யாரும் இந்த நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என்று சொன்னால் சரியல்ல.

21) நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளதுபோல் மனுதாரர் எனது அம்மாவை மரியாதை குறைவாக நடத்தியதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் திருமணம் ஆன நாள் முதல் சென்னையில் இருந்தேன் என்றால் சரிதான். அதன்பிறகு அமெரிக்கா சென்றுவிட்டேன் என்றால் சரிதான். அமெரிக்காவிற்கு சென்றபோது மனுதாரரிடமோ எனது குழந்தையிடமோ சொல்லாமல்தான் சென்றேன் என்றால் சரிதான் அப்போது வழக்கு நடந்து கொண்டுதான் இருந்தது.

22) மனுதாரர் சென்னையில் இருந்தபோது நான்தான் அவரை வீட்டில் இருந்து துரத்திவிட்டேன் என்றும் உண்மையில் அவருடன் சேர்ந்து வாழக்கூடாது என்பதற்காகத்தான் அவ்வாறு செய்தேன் என்றால் சரியல்ல அவர் வளைகாப்பிற்குதான் ஊருக்கு சென்றார். எனது பெற்றோர் மனுதாரரிடம்

வரதட்சணை கேட்டதால்தான் பிரச்சனை ஏற்பட்டது என்றும் அதனை நான் சரி செய்யாமல் அமெரிக்கா சென்றுவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. 2018 ஆம் வருடம் குழந்தை பிறந்தபோது பிரச்சனை ஏற்பட்டுவிட்டது நான் 2023 ஆம் வருடம்தான் அமெரிக்கா சென்றேன்.

23) மனுதாரருக்கு எனது சம்பளத்தை நான் முழுவதுமாக கொடுத்ததற்கு ஆதரவாக வங்கி கணக்கு எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் அவரிடம் பணமாகத்தான் எடுத்துக் கொடுத்தேன். எ.ம.சா.ஆ.5ன் படி எந்த முதல் தகவல் அறிக்கையும் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான் அதில் உண்மை இல்லை என்பதால்தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல விசாரித்தார்கள் மனுதாரர் வழக்கை போடியில் நடத்திக் கொள்வதாக சொல்லிவிட்டார் அதனால் அவர்கள் அனுப்பிவிட்டார்கள்.

24) இரண்டாவது முறையாக வரதட்சணை வழக்கில் மறு விசாரணை செய்யப்பட்டு Mistake of Fact என வழக்கு முடிக்கப்பட்டதாக சொல்லி உள்ளீர்கள் என்றால் சரிதான் அந்த Mistake of Fact ஆக முடிக்கப்பட்ட விபரம் மனுதாரருக்கு தெரியாது என்றும் தற்போது தெரிந்து கொண்டு அதன்மீது மேல் நடவடிக்கை எடுத்துள்ளார் என்று சொன்னால் அதுகுறித்து எனக்கு தெரியாது. எ.ம.சா.ஆ.7 மற்றும் 8ல் காட்டப்பட்டுள்ள நகைகள் உட்பட அனைத்து நகைகளும் எனது வசம்தான் உள்ளது என்றும் சீர்வரிசை பொருள்களும் என்னிடம் உள்ளது என்று சொன்னால் நகைகள் அவரிடம் உள்ளது சீர்வரிசை பொருள்கள் என்னிடம் உள்ளது

25) எ.ம.சா.ஆ.7 மற்றும் 8ல் உள்ள நகைகள் உண்மையான தங்க நகைகளாக அல்லது என்னால் தயார் செய்யப்பட்ட கவரிங் நகைகளா என்பது குறித்து

மேற்படி ஆவணங்களை பார்த்தால் சொல்ல முடியாது என்று சொன்னால் சரியல்ல. திருமணத்தின்போது மனுதாரர் அணிந்து வந்த நகைகளை அவர் எடுத்துச் சென்றுவிட்டார் என்பதற்கு ஆதரவாக நான் வேறு எந்த ஆவணங்களையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் வேறு எந்த ஆவணமும் என்னிடம் இல்லை என்றால் சரிதான்.

26) நான் திறமையான மென் பொறியாளர் என்பதால்தான் எனது நிறுவனம் என்னை அமெரிக்கா அனுப்பியது என்றும் தற்போது வரை நான் அந்த நிறுவனத்திலோ அல்லது வேறு உயர்ந்த நிறுவனத்திலோ பணி செய்துதான் வருகிறேன் என்று சொன்னால் இல்லை. எனக்கு வருவாய் ஆதாரங்கள் நிறைய உள்ளது என்பதால்தான் நான் எனது அண்ணன் (4ம் எதிர் மனுதாரர்)க்கு கார் வாங்கி கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு மாதம் 10 லட்சம் ரூபாய்க்கு மேல் வருமானம் வருகிறது என்றும் அதனால்தான் எனது பெற்றோர் மற்றும் உடன் பிறந்தவர்கள் எனது மனைவியுடன் என்னை சேர்ந்து வாழ விடாமல் தடுக்கிறார்கள் என்று சொன்னால் சரியல்ல.

27) மனுதாரர் என்னை நம்பி சென்னை வந்து அவருடைய வருவாய் ஈட்டும் திறனை இழந்துவிட்டார் என்றும் தற்போது வேறு வழியின்றி பெங்களூருவில் ஒரு சிறிய வேலை செய்து வருகிறார் என்று சொன்னால் பெங்களூரில் வேலை செய்து வருகிறார் என்ற விவரம் சரி. மனுதாரர் அவரது குழந்தையைப் பிரிந்து வாழ்ந்து வருகிறார் என்றும் நான் விரும்பினால் என்னுடன் சேர்ந்து வாழ்ந்து குழந்தையையும் பராமரித்து வருவார் என்றும் ஆனால் அதனை நான் விரும்பாமல் விவாகரத்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

28) மனுதாரர் மதுரையில் உள்ள வேலம்மாள் ரெசிடென்சி பள்ளியில் அவரது குழந்தையை படிக்க வைத்துள்ளதற்கும் தற்போது அவர் வேறு வழியின்றி

பெங்களூரில் வேலை பார்த்து வருவதற்கும் நான்தான் காரணம் என்று சொன்னால் சரியல்ல. அவர் குழந்தையை படிக்க வைப்பதற்காக வருடத்திற்கு ரூபாய் ஆறு லட்சம் வரை செலவு செய்து வருகிறார் என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. நானும் எனது குடும்பத்தாரும் இளைத்த குடும்ப வன்முறைக்கு மனுதாரருக்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

Taken down before me in Open Court, and read over to the witness and admitted by the deponent to be correct.

NALLA KANNAN M

Digitally signed by NALLA KANNAN M
Date: 2026.08.01 16:18:39 +0530

**Judicial Magistrate,**
**Bodinayakanur.**